4. புதுக்கோட்டை நகராட்சி நூற்றாண்டு விழாவையொட்டி சிறப்பு உதவித் தொகை வழங்குதல்— முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு நகர்மன்றத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், அந்தத் தொகுதி மக்களின் ஏகோபித்த கோரிக்கையை ஏற்றும், நகரை மேம்பாடு செய்வதற்காக 50 கோடி ரூபாய் வழங்கியதற்கு அந்தத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். உலக தமிழினத்திற்கே அம்மா என்ற ஒற்றைச் சொல்தான் இன்றைக்கு தாரக மந்திரம். ஒவ்வொரு தமிழனும் பெருமைகொள்ளும் நாத மந்திரம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அகிலமே வியந்து நோக்கும் ஒரு புகழ்மிக்க இயக்கமாக்கி, இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாக என்றென்றும் வெற்றித் திருமகளாக (மேசையைத் தட்டும் ஒலி) வலம் வரும் ஈடு இணையற்ற தலைவி எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*